557

கும்பகோணம் விவசாய சங்கத்தின் மாஸாந்திரப் பத்திரிகை.

வாலியம் 12] 1918-ஞு ஏப்பிரல்மீ [நெ. 4

MONTHLY JOURNAL OF 8 PAGES

EDITED BY

Mr. R. Srinivasa Iyengar B. A. and Mr. A. Subramania Iyer, B. A.

Annual Subscription is One Rupee. Post Free.

DEPARTMENT OF AGRICULTURE, MADRAS.

நெற்பயிருக்கு பசுந்தாள் எரு.

பசுந்தழைகளை சேகரித்து வயல்களில் சேர்செய்யும் பொழுது அவைகளை போடுதலும், ஒரு பசுந்தாள் எரு பயி. வயல்களில் பயிர் செய்து சேர்செய்யும்பொழுது அவைகளை உழுது மடித்தலும், ஆகிய இவ்விரண்டும் "பசுந்தாள் எருவிடல்" என்றதில் அடங்கியிருக்கிறது

இவ்விரண்டு முறைகளும் தேசத்தின் வெவ்வேறு இடங்களில் கையாடப்பட்டுவருகின்றன. ஆனால் முதல் சொல்லியது சாதாரணமாய் உபயோகப்பட்டுவருகிறது. வயல் செய்யும் அநேக கிருஷிகர்களுக்கு பசுந்தழை எரு அதிக சிரேஷ்டமானதென்று தெரியும். எந்தவிதத்தில் இது சிரேஷ்டமென்று தெளிவாய் ஏற்படவில்லை. ஆனால் டிபார்ட்மெண்டாரின் அனுபோகத்தில் அநேகமாப் பூமியின் மண்வயணத்தை மேன்மைபடுத்துகிறதினால் என்று தெரியவருகிறது. வயலின் மண் சுற்றுப்புறத்திலிருக்கிற புஞ்சை நிலங்களைவிட எப்போதும் மிருதுவாயிருக்கும். இது இம்மாதிரியாவதற்கு காரணம் ஏதென்றால் வயலை சேர்செய்யும் முறையால் கனமாயும் பெரிதாயுள்ள மண் அணுக்கள் முதலில் சேரில் பதிகின்றதினாலும் மிருதுவாயுள்ள மண் துளிகள் அம்மாதிரி பதிவதற்கு அதிக காலமாகின்றதாலும் பூமியில் பாயும் ஜலத்துடன் வருகிற வெகு சிறிதாயும் மிருதுவாயுமுள்ள மண் துளிகள் பூமியில் தங்கும்படி விடப்படுவதினால்தான். ஆகையால் இந்த காரணத்தைப்பற்றி வயல்களெல்லாம் களிப்பு மிசுரமாகிறதுடன் நாளுக்குநாள் இன்னும் அதிக களிப்பாகிறது. இம்மாதிரியாவதை பூமிக்கு பசுந்தழையிடல் அல்லது அதிக பரிமாணமுள்ள இந்திரியவஸ்து எருவிடல் தடுக்கின்றதுடன் பூமியில் வளர்ந்துவரும் நெற்பயிரின் வேர்களுக்கும் பூமியிலிருக்கும் ஜலத்திற்கும் உள்ளேபோக வழியைத் திறந்து வைக்கிறது. ஆகையால்

இதுதான் பசுந்தாள் எருவின் முக்கிய உபயோகமாய் தெரிகிறது. மணல் பூமிகளைவிட களிப்பு பூமிகளுக்கு இவ்வெருவின் வீரம் அதிகமாய் காணப்படுவதற்கு இதுதான் காரணம். மணல் நிலங்களில் வடிகால் நன்றாயிருந்தால் பூமியை திறக்க வேறேயாதொரு இந்திரியவஸ்துள்ள எருவில்லாமல் பூமியின் ஜலமும் நெற்பயிரின் வேரும் தாராளமாய் உள்ளே செல்லும். ஆகையால் பசுந்தாள் எருவின் உபயோகம் அநேகமாய் பூமியின் மண்வயணத்தை திருத்தலும் நெற்பயிரின் வேர்கள் அதிகமாக விஸ்தீரணத்திலிருந்து ஆகாரம் கிடைக்கும்படி செய்வதும், பசுந்தாள் எருப்பயிர்கள் நெற்பயிருக்கு சுலபமாய் உட்கொள்ளும் ஆகாரம் சில அளவும் கொடுக்கின்றன. வெளியிலிருந்து கொண்டுவரப்பட்ட தழைகள் சுபாவமாய் வயலின் செழிப்பை பூமியில் உற்பத்திசெய்த பசுந்தாள் எருவைவிட அதிகமாக்குகிறது. இரண்டு முறைகளிலும் வேறு சில நற்குணமும் துர்க்குணமும் உண்டு.

பசுந்தழைகளை வெளியிலிருந்து கொண்டுவருவதில் அதிக கஷ்டங்களுண்டு. இவைகளை கொண்டுவரும் தூரம் அதிகரித்தால் அதற்கு தகுந்த அதிக சிலவும் ஆகும். கிருஷிகர் 20 முதல் 30 மைல் தூரத்திலிருந்தும் இன்னும் அதிக தூரத்திலிருந்தும் அத்தழைகளை வண்டியில் கொண்டுவர நேருகிறது. இதனால் அதிக சிரமமும் காலமும் வீணாவதுடன் வண்டிகளையும் வண்டிகளுக்கு எருதுகளையும் காப்பாற்றும் அதிக சிலவும் ஏற்படுகிறது. இது தவிர நடவுவேலைகளில் தாமதம் ஆகிறது. ஏனென்றால் அதிககாலம் தழை சேகரம் செய்வதில் வீணாகிறது. நடவு முடிவதற்குள் நடுப்பருவம் கடந்துவிடுகிறது. ஒவ்வொரு கிருஷிகனுக்கும் சரியான பருவத்தில் நட்டபயிரின் மாசூல்போல் காலங்கடந்து நட்டபயிரில் எவ்வளவு அதிகமாய் எருவிடினும் கிடைப்பதில்லையென்று தெரியும். நஞ்சை நிலத்திலே உற்பத்திசெய்த ஒரு பசுந்தாள் எரு பயிர் அந்த இடத்திலே உழுவதற்கு தயாராயிருக்கிறது. ஆனதுபற்றி நெற்பயிர் சரியான காலத்தில் நடவொருதாமதமில்லை. தூரத்திலிருந்து கொண்டுவரும் வண்டிவாடகை சிலவும் கிடையாது. இது தவிர பூமியில் உற்பத்திசெய்த ஒரு பசுந்தாள் எருப்பயிர் தன்னுடைய வேரை ஆழத்தில் செலுத்துவதினால் பூமியைப்பிளந்து வடிகாலை விர்த்திசெய்வது ஒரு விசேஷகுணமாகும். இது களர்நிலங்களையும் அதிக களிப்பு பூமிகளையும் பற்றின மட்டில் அதிக முக்கியமானது. இப்பேர்க்கொற்ற பூமிகளில் பசுந்தழை எருவிடுதலினும் பசுந்தாள் எருப்பயிர்கள் சாகுபடி செய்வதினால் ஏன் அதிகபலனை கொடுக்கிறது என்ற விவரம் தெரியப்படுத்துகிறது.

பசுந்தாள் எரு செய்வதற்காக அநேக பயிர்கள் உண்டு. அவைகளில் தெரிந்தெடுப்பது அந்தந்த இடத்துக்குரிய பூமியின் ஸ்திதியையும் பருவத்தையும் சீதோஷ்ண நிலைமையையும் பொறுத்திருக்கும். கொள்ளு, பச்சைப்பயிர், நரிப்பயர், தட்டைப்பயர் போல் கோதுப்பயிர்களில் அநேகம் இதற்காக உபயோகப்படுகின்றன. சாகுபடி செய்யப்படுகிற மற்ற பயிர்களில் அவுரி அதிகமாய் உபயோகப்பட்டு வருகிறது. சணப்பும் சில சமயங்களில் அதிக சவுகரியங்களிருக்கும்போது சாகுபடி செய்யப்படுகின்றது. சாதாரணமாய் அதிக திருப்திகரமுள்ள இரண்டு பசுந்தாள் எருப்பயிர்கள் இந்த இராஜதானியில் சாதாரணப்பயிர்கள்போல சாகுபடி செய்யப்படுகிறதில்லை ஆனால் பசுந்தழைக்காகமட்டும் இவைகள் சாகுபடி செய்யப்படுகின்றன. இவை காட்டவுரியென்ற கொளிஞ்சியும் வங்காள தேசத்திலிருந்து கொண்டுவரப்பட்ட டைன்சா என்ற பயிரும். இந்த இராஜதானியில் இந்த பயிரின் காட்டு இனுசு ஒன்று வளருகிறது. இதற்கு தமிழில் தக்கைபூண்டு என்று பெயர்

பசுந்தாள் எருப்பயிர்களாய் சாகுபடி செய்யப்படுகிற அநேக கோதுப்பயிர்களைப்பற்றி கிருஷிகர்களுக்கு எந்த கோதுப்பயிர்கள் எந்த ஸ்திதிகளில் தங்களுடைய வயல்களில் பசுந்தாள் எருப்பயிராய் வளரும் என்ற சங்கதி முன்னமே தெரிந்திருக்கிறதினால் அவைகளைக் குறித்து எழுதுவது அனாவசியம்.

சணப்பை வளரும்படி செய்வது கஷ்டம். அதை வளரும்படி செய்தால், வெகு துரிதமாயும் வருஷத்தில் எல்லா காலங்களிலும் வளரக்கூடிய சிலாக்கியம் உண்டு இது காய்ச்சல் நன்றாய் பொறுக்காது. அதிக காய்ச்சல் ஸ்திதியினால் பீடிக்கப்பட்டால் பூச்சியும் புழுவும் அநேகமாய் இதை தின்றுவிடும். அதிக ஜலத்தையும் பொறுக்காது. வதிகால்களில் அதின் இலைகளை உதிர்த்துபட்டுப்போம். ஆகையால் பசுந்தாள் எருப்பயிராய் இதன் உபயோகம் தேவையானபோது ஜலம் பாய்ச்சிக்கொள்ள சாத்தியமான வடிகாலுள்ள பூமியில் மாத்திரம்தான் இதைபயிர் செய்யலாம். இம்மாதிரியுள்ள ஸ்திதிகளில் 6-7 வாரங்களில் அதிக பசுந்தழையை கொடுக்கும். இது விசேஷமான பசுந்தாள் எருப்பயிர். ஏனென்றால் இதன் கொம்புகள் நார் சம்பந்தமாயிருப்பதினால் பூமியில் நிதானமாய் அழுகி பூமியை திறந்து வைக்கிறது.

அவுரி களிப்பு பூமியில் ஒரு விசேஷமான பசுந்தாள் எருப்பயிர். டிசம்பர்மீ முதல் பிப்ரவரிமீ வரையில் சம்பா பயிர் அறுவடை காலத்தில் விதைக்கக்கூடியது. பசுந்தழைக்காக சாகுபடி செய்யப்பட்டால் விதைகளை நெல் அறுவடைக்கு ஜலம் வடிக்கிற

காலத்தில் நெற்பயிருடன் சாதாரணமாய் விதைக்கிறார்கள். மிருதுவான மண்ணில் விதைகள் பதிகிறது. இவை பூமி காயுகாய முளைக்கிறது. சிறு இளஞ்செடி தன் வேரை கீழே செலுத்தி தானே ஜீவிக்க சக்தி அடையும்வரையில் பூமியில் நிற்கிற நெற்பயிர் அவைகளை காப்பாற்றுகிறது. இது அதிக காய்ச்சல் தாங்கக்கூடிய பயிர். ஆழப்போகக்கூடிய வேர் சம்பந்தமுள்ளது. இது கோடைகாலத்து மழையினால் வெகு செழிப்பாய் வளருகிறது. அப்படி கோடை மழை வராவிட்டால் பயிர் உயிருடன் இருந்து நெல் பருவத்துக்கு முன்கால மழை பெய்கிறபோது வளர ஆரம்பிக்கும். கோடை மழை அனுகூலமாயிருந்து வளர்ச்சி செழிமையாயிருந்தால் பயிரை அறுத்து திரும்பவும் வளரவிடலாம். அநேக இடங்களில் இம்மாதிரி செய்து அறுத்தப்பயிரை நாத்தங்கால்களுக்கு உபயோகிப்பதுண்டு. அநேக இடங்களில் கிணற்றிறவையினால் உதவியுள்ள குளங்களின் கீழ் உள்ள பூமிகளில் சாதாரணமாய் ஓர் புஞ்சை பயிர் கம்பு. இந்த கிணற்று உதவியால் செய்யப்படுகிறவிடத்தில் அவுரியை கம்புடன் கலந்து விரைப்பதுண்டு. கம்பு அறுவடையானபின் அவுரி ஒரு புஞ்சை பயிராக விடப்பட்டு சாதாரணமாய் நல்ல செழுமையான பயிரைக் கொடுக்கிறது.

காட்டவுரி அல்லது கொளிஞ்சி வயலில் சாகுபடி செய்யப்பட்டாலும் கருசு புஞ்சை பூமிகளிலிருந்து கொண்டுவரப்பட்டாலும் இது வெகு சிலாக்கியமானதாக எண்ணப்படுகிறது. சில ஜில்லாக்களில் கிருஷிகர் 50 மைலும் அதற்கு மேலும் வண்டிகளுடன் போய் இந்த தழைகளை சேகரித்து வருவார்கள். பசுந்தாள் எரு பயிராய் இது அதிக வலிவுள்ளதாயும் காய்ச்சல் நன்றாய் தாங்கக்கூடியதாயுமிருக்கின்றது. கொஞ்சம் கரடு முரடாயுள்ள மண் அணுக்கள் கூடிய நல்ல வடிகால் உள்ள பூமியில் மாத்திரம் நன்றாய் வளரும். அதிகமாய் வெடிக்கிற அதிக களிப்புள்ள ஆற்றுப்பாய்ச்சல் பூமிகளில் இது வளராது. அனுகூலமான ஸ்திதியில் இது கொடுமையான வேனிற்காலத்து காய்ச்சலை தாங்கக்கூடியது. ஆனால் தண்ணீர்ப்பாய்ச்சலையும் தண்ணீர் தங்குதலையும் தாங்காது. பயிர் சிறிதாயிருக்கும்போது பூமியில் இரண்டொரு நாள் ஜலம் நிற்கக்கூடிய ஒரு பெருமழை செடிகளை கொல்லும். ஆனால் பூமியில் தண்ணீர் நிற்காமல் வடிகால் நன்றாயிருந்தால் பயிர் பிழைக்கும். சம்பா பயிர் அறுவடைக்குபின் பயிராகக்கூடிய சில பயிர்களில் இது ஒன்று. தவிர மழையில்லாமலும் தண்ணீர் பாய்ச்சப்படாமலும் பிழைத்து வளரக்கூடியது. ஆகையால் இது வெகு சிலாக்கியம். ஒரு போக நஞ்சை பூமிகளில்

இது அதிக சிலாக்கியமானது. ஏனென்றால் பயிர் பூமியில் மடிக்கப்படுவதற்கு முன் விதைகள் செடிகளில் உண்டாய் முற்றும். அந்த விதைகள் பூமியில் நெற்பயிர் வளரும் காலத்தில் கிடந்து நெற்பயிர் அறுவடைக்குமுன் ஜலம்வடித்தபின் முளைக்க ஆரம்பிக்கும். ஆகையால் நன்றாய் ஒருதரம் இந்த பசுந்தாள் எரு ஏற்பட்ட பின் அபுரூபமாய் கோடைகாலத்து பெருமழையால் நாசமடைந்தாலொழிய வருஷா வருஷம் தானே வளரும். இதற்கு ஒரு விசேஷ குணமுண்டு மாடுகள் ஜீவனமில்லாமல் பட்டினி கிடந்தாலொழிய இதை தின்னாது.

கொளிஞ்சியின் விதை சுலபமாய் முளைப்பதில்லை. ஏனென்றால் விதையின்தோல் அதிக கெட்டியாயிருப்பதால் ஜலம் உள்ளே பிரவேசிப்பதில்லை. அதை முளைக்கும்படி செய்ய விதையின் புறத்தை காயப்படுத்தவேண்டும் இப்படி செய்வதற்கு கூர்மையான மணலுடன் அதை உறைக்கலாம் இதனால் விதையின் மேல்தோல் உரிந்து ஜலத்தை உட்புகும்படி செய்யும். விதை கொஞ்சமாயிருந்தால் நெல்குத்தும் உரலில் மணலுடன் கலந்து குத்தலாம். விதை ஏராளமாயிருந்தால் கூர்மையான மணலை களத்தில் பரப்பி அதின்மேல் கொளிஞ்சிவிதையை பரப்பி வைக்கோலினால் மூடி கொஞ்சகாலம் மாடுகளை மிதிக்க செய்யவேண்டியது.

டைன்சா: களிப்புள்ள பூமிகளுக்கும் முக்கியமாய் களர் சம்பந்தமுள்ள பூமிகளுக்கும் இது வெகு சிலாக்கியமான பயிர். இது காய்ச்சல் தாங்கக்கூடிய பயிர். அதல்லாமல் நஞ்சை நில ஸ்திதிகளை பொறுக்கக்கூடியது சோதனையாய் பயிர் செய்யவேண்டியது இன்னும் அநேகமிருந்தாலும் அநேக விஷயங்களை குறித்து சமாசாரம் சொல்லமுடியும். இந்த பயிரினால் விசேஷ நன்மைகளை அடைந்த இடங்கள் கிணரின் உதவியாலுள்ள குளங்களின் கீழ் உள்ள பூமிகள் இங்கே சாதாரணமாய் மே, ஜூன் மாதங்களில் விதைக்கப்படுகிறது மூன்று மாதம் வளரப்பட்டு சம்பா நெற்பயிருக்காக உழுது மடிக்கப்படுகிறது. இதை தனியாகவாவது அல்லது கம்பைப்போல் உயரவளரக்கூடிய தானியப் பயிருடன் கலந்து விதைக்கலாம். சாதாரணமாய் ஒரு புதிய இடத்தில் இதை சாகுபடி செய்யும்போது ஒரு தானியப்பயிருடன் கலந்து விதைப்பது நலம். ஏனென்றால் தனியாய் பயிரிட்டால் அங்குமிங்கும் திரியும் கால் நடைகளால் நாசமடையும். கம்புடன் கலந்தால் உயரமானது சாதாரண பயிராக மதிக்கப்பட்டு மாடுகள் உள்ளே போகவிடாமல் தடுக்கப்படுகிறது. தக்கை பூண்டின் அனுகூலம் தெரிந்தவுடன் தனியேவிதைத்தால் அது நற்பயிராக மதிக்கப்படுகிறது. கால்நடைகள் இதை வெகுஆவலுடன் தின்கின்றன.

வெய்யில் காலத்தில் பச்சை தக்கை பூண்டை கால் நடைகளுக்கு தீவனமாக உபயோகித்த இடங்கள் உண்டு. அகத்திதழை உபயோகிக்கிற மாதிரி இந்த தக்கை பூண்டு தீவனமாய் உபயோகிக்கப்படுகிறது அடியில்கண்ட காரணங்களால் இந்த முறையில் சிபார்சு செய்யக்கூடியது அதிகமுண்டு (1) கால் நடைகளை நல்ல ஸ்திதியில் வைத்திருப்பது (2) தக்கை பூண்டு செடிகளின் நுனியை கிள்ளிவிட்டால் பக்ககிளைகள் அநேகம் உண்டாய் ஒரு அடர்ந்த புதர்போன்ற வளர்ச்சி உண்டாகிறது, (3) கிருஷிகருக்கு அதிக சிலாக்கியமான எருவாய் சொல்லப்படுகிற சாணி எருவின் உற்பத்தியை அதிகரிக்கிறது.

முக்கியமாய் பாய்ச்சுவதற்கு ஜலமில்லாத விடங்களில் அறுவடைக்குமுன் ஜலம் வடியவிடும்காலத்தில் சம்பா பயிரில் விதைப்பது இன்னொரு முறையாகும். விதை மிருதுவான சேரில் புதைகிறது பின்பு முளைக்கிறது முற்றும் நெற்பயிர் மேற்பரப்பை காப்பாற்றி தக்கை பூண்டு இளஞ்செடிகள் நன்றாய் நிலைக்கப்படுகிறவரையில் பூமியில் வெடிப்புண்டாகாதபடி தடுக்கிறது.

அதிக களிப்புள்ள பூமிகளில் தக்கை பூண்டு பயிர் பூமியிலுள்ள ஈரத்தைக்கொண்டு 3, 4 மாதம் வளரும். அப்போது அதை வெட்டி சேகரம் செய்து சேர்செய்ய ஜலம் வரும்போது பூமியில் போடலாம். விவசாய டிபார்ட்மெண்டாரால் இதை சேகரம்செய்து வைக்க அநேக முறைகள் பரிசோதனை செய்யப்பட்டுவருகின்றன. தழைகளை ஒரு குழியில் போட்டு மண்கட்டிகளால் பாரம் வைக்கலாம் அல்லது இதைவிட அதிக சிலவில்லாமல் செய்யக்கூடிய முறை இந்த தழைகளை ஒரு போராய் ஈரமண்ணுடன் மாறிமாறி வைப்பது. இந்த பசுந்தாள் எருப்பயிர்களை பயிர்செய்ய விரும்புவர்களுக்கு அடியில்கண்ட விஷயங்கள் உபயோகமாயிருக்கும் :—

கொளிஞ்சிவிதை ஏக்ராவுக்கு விதைப்பது 3. 4 பட்டணம்படி எவ்விடத்தில் மண்களிப்பாயிருக்கிறதோ அவ்விடத்தில்விதை அதிகமாயும் எவ்விடங்களில் பூமி மணலாயிருக்கின்றதோ அவ்விடங்களில் விதை குறைவாயும் உபயோகப்படுத்தலாம். தக்கை பூண்டு விதை ஏக்ராவுக்கு விதைப்பது $2\frac{1}{2}$, 3 பட்டணம்படி. ஆனால் இந்த விதை கெடாமலிருப்பதில்லை. விதை கறுப்பாயிருந்தால் 3, 4 பட்டணம்படி உபயோகப்படுத்தலாம். விவசாய டிபார்ட்மெண்டார் வருஷா வருஷம் இந்த இரண்டு பசுந்தாள் எரு விதைகளையும் குடிகளுக்கு விற்பனைசெய்ய விலைக்கு வாங்குகிறார்கள். எல்லோருக்கும் தேவையான விதைகள் வாங்குவதில் அதிக சிரமமிருப்பதால் குடிகள் அவரவர்கள் விதைகளை சேகரம் செய்ய ஆலோசனை சொல்லப்படுகிறது. 1915-ம் ௵ 8 செப்டம்பர்

துண்டு பத்திரிகை கொளிஞ்சிவிதை சேகரம் செய்வதற்கு வேண்டிய முறைகளை தெரிவிக்கிறது. தக்கை பூண்டுவிதை சேகரம் செய்ய பசுந்தாள் எருப்பயிரில் ஒருபாகம் அடுத்த வருஷம் தேவையான விதைக்காக முற்றுவதற்கு சாதாரணமாய் விட்டுவிடலாம். அல்லது விதைகளை நெல் பூமியின் வரப்புகளில் விதைத்து அந்த செடிகளிலிருந்து விதை சேகரிக்கலாம்.

முன்னே சொன்னபடி பசுந்தாள் எருபயிருக்கு முக்கிய சிலாக்கியம் மண்வயணத்தை சீர்திருத்தல். அதனால் நெற்பயிரின் வேர்கள் பயிருணவை தேடி பரவ ஏதுவாகும். ஆகையால் கிரம வரிசையாய் நல்லபலனை கொடுக்கிற சில பயிர்கள் பூமியிலுள்ள பயிருணவுகளை அதிகமாய் உபயோகப்படுத்துகிறது. பூமிக்கு உரஞ்செய்யாமல் சிலாக்கியமான மகசூல்கொடுக்கும்படியான பயிர்களை உற்பத்தி செய்துகொண்டேயிருக்க முடியாது. பயிர்களுக்கு தேவையான உணவுபொருள்கள் பூமியில் யதேஷ்டமாயிருப்பதாய் தெரிகிறது. அதிர்ஷ்டவசமாய் பயிருணவின் மூலவஸ்து பூமியிலிருந்து குறைவடையக்கூடியது சிலதுதான்.

இவைகளில் அதிக முக்கியமானது பாஸ்வரம் என்னும் வஸ்து. சுண்ணாம்பும் பாஸ்வரமும் சேர்ந்த கலப்பு பதார்த்தம் எலும்பாகிறது. கோடிக்கணக்கான ஜனங்களுக்கு அரிசி சாம்பாடென்ற விஷயத்தையும் கோடிக்கணக்கான கால்நடைகளுக்கு நெல் வைக்கோல் உணவென்ற சங்கதியையும் விசாரித்தால் நெற்பயிர் எவ்வளவு பாஸ்வரம் உபயோகப்படுத்துகிறதென நன்றாய் விளங்கும். ஆகையால் இறந்துபோகும் மிருகங்களுடைய எல்லா எலும்பையும் பூமியில் திருப்ப உபயோகிக்கவேண்டும். நெற்பயிர் இந்த வஸ்துவை ஜலத்தில் கரைந்திருந்தால் மாத்திரம் உபயோகப்படுத்தும். எலும்புகளை ஜலத்தில் வைத்தால் அவைகள் கரைவதாக தெரியவில்லை. அவைகள் வடிவத்தையும் மழமழப்பையும் வைத்துக்கொள்ளுகிறது பூமிக்கு இந்த தூளை உபயோகப்படுத்தும்போது பூமியிலுள்ள ஜலத்திற்கு அதிக பரப்பு வெளிப்படுத்த அவைகளை தூளாக பொடிசெய்யவேண்டியது ஆகையால் அவசியம். அப்போதும் அதிக தாமதமாய் கரைகின்றதால் அடுத்த வருஷம்வரையில் அவை நெற்பயிரை விர்த்தியடைய செய்வதை பார்ப்பதில்லை. அதாவது பூமியிலுள்ள ஜலம் இந்த எலும்புகள்பேரில் ஒரு வருஷம் வேலைசெய்தால் மாத்திரம் கண்டுகொள்ளத்தக்க பரிமாணம் அவைகள் கரைய ஆரம்பிக்கும். ஆகையால் ஒரு கிருஷிகன் பசுந்தழை உபயோகப்படுத்தினால் வெளியிலிருந்து சேகரம் செய்து பூமிக்கு போட்டாலும் அல்லது பூமியில் உற்பத்திசெய்து அதில் உழுது மடித்தாலும் ஏகாவுக்கு

ரைபாசம் எலும்புதூள் அத்துடன் உபயோகிப்பது நலம். சிலபூமிகளில் இந்த மூலபதார்த்தம் அதிகமாயிருக்கிற இடங்களில் எலும்பு தூள் அதிக மாகுலை கொடுப்பதில்லை. ஆனால் பழைய நஞ்சை பூமிகள் அநேகமாய் இதை செலவழித்திருக்கிறது. அப்பேர்க்கொற்ற பூமிகளில் அநேகம் இந்த வஸ்து அதிகமாய் குறைந்திருக்கிறது. எலும்புதூள் தவிர பிரகாசிதமில் எரு வேறு சில பதார்த்தங்களிலும் உண்டு. மீனில் பாஸ்வரம் அதிகமாய் உண்டு. மனுஷ ஆகாரமாக உபயோகப்படுத்துவதற்கு அதிகமாய் சில சமயங்களில் இவைகளை பிடிப்பதுண்டு. மீன் எரு மேற்கு கடலோரத்திலிருந்து அதிக பரிமாணம் எற்றுமதி செய்யப்படுகிறது. இது "மத்தை" என்னும் மீனின் தேகத்தை வெய்யலில் காயவைப்பதினால் உண்டாகிறது அல்லது அதிலிருந்து வெகு விலையுள்ள எண்ணெயெடுக்கிறதற்காக அந்தமீனை வேகவைத்து அப்படி வேகவைத்தமீன் வெய்யிலில் காயப்போடப்படுகிறது. இதற்கு "மீன் குவானோ" என்று பெயர் இந்த இரண்டும் நெற்பயிருக்கு வெகு சிலாக்கியமான எருக்கள். ஏனென்றால் பிரகாசிதமில் அவைகளில் அதிகமாயிருப்பதாலும் மீனின் எலும்புகள் மிருதுவானதால் மற்ற மிருகங்களின் எலும்புகளைவிட இவைகள் அதிசீக்கிரம் நெல்பயிர் பூமிகளின் ஜலத்தில் கரைகிறது.

திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் சில இடங்களில் உருண்டை வடிவமுள்ள கற்கள் காணப்படுகின்றன அவைகள் எலும்புகளை போலவே கூட்டப்பட்ட பொருள்கள். எலும்புதூள் மாதிரி இவைகளை நன்றாய் நுண்ணியதாய் பொடிசெய்து உபயோகிக்கலாம் இது "புளோர்பாஸ் வேட்" என்றபேருடன் விற்கப்படுகிறது. ஆகையால் கிருஷிகர் நெற்பூமியில் அதிகமாய் உபயோகப்பட்டு போகும் பாஸ்வரம் என்ற இந்த வஸ்துவை அநேக விதத்தில் அடையலாம் என்ற சங்கதிவிளங்கும்.

எச். வி. சாம்ஸன்,
டிப்டி டைரெக்டர் ஆப் அக்ரிகல்டர், 5, 7-வது சர்கில்கள்,
திருச்சினாப்பள்ளி.

Printed at the Alexandra Press, Kumbakonam and Published by Mr. C. R, Lakshmivaraha Ayyangar; B. A. B. L., and Mr. R, Srinivasa Ayyangar, B, A, for The Agricultural Association, No. 5. Cutchery Road, Kumbakonam.